# INTERNATIONAL INDIAN SCHOOL –DAMMAM
## MIDDLE SECTIONS
### ANNUAL EXAM WORK SHEET- 2023-24

**CLASS – VI** **SUBJECT- TAMIL**

**அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து உணர்ந்து, கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

தேசிக விநாயகம் பிள்ளை கி.பி.1876 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் பிறந்தார். இவரது பெற்றோர் சிவதாணு, ஆதிலட்சுமி. இவரது பாடல்கள் இனிமையும், எளிமையும் நிறைந்தவை. குழந்தைகளுக்காகத் தெளிந்த தமிழில் இனிய கவிகள் பாடியவர். இதனால் 'கவிமணி' எனப் போற்றப்பட்டவர். ஆசிய ஜோதி, மலரும் மாலையும் போன்றவை இவர் எழுதிய நூல்கள் ஆகும். இவர் உரைமணிகள் என்னும் உரைநடை நூலையும் எழுதியுள்ளார். கவிமணி 1954 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**வினாக்கள்**

1. கவிமணியின் பாடல்கள் எத்தகையவை ?
2. கவிமணி எங்கு, எப்போது பிறந்தார் ?
3. கவிமணி எழுதிய நூல்கள் யாவை ?
4. கவிமணியின் பெற்றோர் யாவர் ?
5. கவிமணி எப்போது இயற்கை எய்தினார் ?

**ஆ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, உணர்ந்து, கேட்கப்பட்ட பல்விடை கேள்விகளுக்கு விடையளிக்க.**

ஒரிசாவில் பூரி என்ற நகருக்கு அருகில், கடற்கரையில் அமைந்துள்ள 'கொனார்க்' என்ற சூரியக்கோவில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைப் பார்க்க அயல்நாடுகளிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகிறார்கள். கொனார்க், பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசன் நரசிம்ம தேவனால் கட்டப்பட்டது. இக்கோவில் 1200 சிற்பிகளின் கைவண்ணத்தில் 12 வருடங்களில் உருவாக்கப்பட்டது. 'கொனார்க்' என்பதற்கு சூரியனுடைய கோணம் என்பது பொருள்.

**வினாக்கள்** :-

1. 'கொனார்க்' அமைந்துள்ள இடம் எது?
   அ) கர்நாடகம் ஆ) கேரளம் இ) ஒரிசா ஈ) விசாகப்பட்டணம்

2. கொனார்க் கட்டப்பட்ட ஆண்டு __________

அ) பத்தாம் நூற்றாண்டு ஆ) பன்னிரண்டாம் நூற்றாண்டு
இ) ஏழாம் நூற்றாண்டு ஈ) இருபதாம் நூற்றாண்டு

3. இக்கோவிலைக் கட்டிய அரசர் __________

அ) நரசிம்ம பல்லவன் ஆ) நரசிம்ம தேவன்
இ) நரசிம்ம குப்தன் ஈ) நரசிம்ம ராஜன்

4. இக்கோவிலைக் கட்டி முடிக்க எடுத்துக் கொண்ட ஆண்டுகள் எத்தனை?

அ) 5 ஆ) 17 இ) 12 ஈ) 20

5. 'கொனார்க்' என்பதன் பொருள் என்ன?

அ) முக்கோணம் ஆ) கடலின் கோணம்
இ) சந்திரனின் கோணம் ஈ) சூரியனுடைய கோணம்

இ) **'சிறுசேமிப்பு'** எனும் தலைப்பில் **கட்டுரை** எழுதுக.

ஈ. பிறந்தநாள் விழாவிற்கு அழைப்பு விடுத்து தோழன் / தோழிக்குக் **கடிதம்** எழுதுக.

## இலக்கணம்

**அ) பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உணர்ச்சி வாக்கியம்

அ) நீ திருக்குறளைப் படி ஆ) யார் நீ ?

இ) ஆசிய ஜோதியின் ஆசிரியர் கவிமணி ஆவார் ஈ) என்னே! அழகு!

2. நிகழ்காலம்

அ) குதிக்கிறான் ஆ) உண்டான்

இ) தாவுகின்றன ஈ) வருவார்கள்

3 உரிச்சொல்

அ) மாநகர் ஆ) மாடுகள் இ) நாவரசன் ஈ) ஆடினாள்

**ஆ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

4. நனி மகிழ்ந்தான் - இதில் நனி என்பது ____________ ஆகும்.

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

5. பசு புல் மேய்ந்தது என்பது ___________ வாக்கியம்

அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை

இ) வினா ஈ) உணர்ச்சி

6. கருத்து வகை வாக்கியங்கள் ___________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

**இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்து நிரப்புக.**

7. கருவி ( பொருத்தமான சொல் எது? )

அ) வால் ஆ) வாள் இ) வாழ் ஈ) வாசல்

8. ஆலயம் தொழுவது சாலவும் நன்று ( வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள உரிச்சொல் எது? )

அ) ஆலயம் ஆ ) தொழுதல்

இ) சால ஈ) நன்று

9. மணம் ( உரிய பொருளைத் தேர்ந்தெடு )

அ) மனது ஆ) ஈகை

இ) யாசித்தல் ஈ) வாசனை

**ஈ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

10. பால் குழந்தையால் குடிக்கப்பட்டது

அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை

இ) கட்டளை வாக்கியம் ஈ) வினா வாக்கியம்

11. கிஸ்தி

அ) செல்வம் ஆ) வரி இ) வட்டி ஈ) நாடு

12. மயில்

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

**உ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

13. அ) வன்மை என்பதன் பொருள் உறுதி.
ஆ) வன்மை என்பதன் பொருள் ஈகை.
இ) வன்மை என்பதன் பொருள் கொடை
ஈ) வன்மை என்பதன் பொருள் புகழ்ச்சி

14. அ) ஐயகோ ! மலை சாய்ந்ததா ! என்பது கட்டளை வாக்கியம்.
ஆ) ஐயகோ ! மலை சாய்ந்ததா ! என்பது உணர்ச்சி வாக்கியம்.
இ) ஐயகோ ! மலை சாய்ந்ததா ! என்பது செய்தி வாக்கியம்.
ஈ) ஐயகோ ! மலை சாய்ந்ததா ! என்பது வினா வாக்கியம்.

15. அ) ஐ, ஆல், கு என்பன உரிச்சொற்கள்
ஆ) ஐ, ஆல், கு என்பன பெயர்ச்சொற்கள்
இ) ஐ, ஆல், கு என்பன வினைச்சொற்கள்
ஈ) ஐ, ஆல், கு என்பன இடைச்சொற்கள்

**16. பொருத்துக.**



1. ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார் - கட்டளை வாக்கியம்
2. ஏன்னே அருமையான குரல்! - வினா வாக்கியம்
3. பெரியோர் அறிவுரையைக் கேள்! - செய்தி வாக்கியம்
4. தேர்வு எப்படி எழுதினாய்? - உணர்ச்சி வாக்கியம்


**17. தொகைச்சொல்லை விரித்து எழுதுக.**

1. முக்கனி -
2. நானிலம் -

3. ஐம்பூதங்கள் -
4. அறுசுவை -
5. எழுவண்ணம் -

**18. பின்வரும் வடிவங்களின் பெயர் எழுதுக.**

1.  ________________  ________________

2.  ________________  ________________

## செய்யுட்பகுதி
## நீதிநெறிவிளக்கம்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **நவை** - என்பதன் பொருள் __________.
   அ) அச்சம் ஆ) மகிழ்ச்சி இ) வருத்தம் ஈ) குற்றம்

2. **அவையஞ்சி** - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
   அ) அவைய + அஞ்சி ஆ) அவை + அஞ்சி
   இ) அவை + யஞ்சி ஈ) அவ் + அஞ்சி

3. **இன்னலம்** - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
   அ) இன் + னலம் ஆ) இன் + நலம்
   இ) இனிமை + நலம் ஈ) இனிய + நலம்

4. **கல்லார்** - இச்சொல்லின் எதிர்ச்சொல்__________.

அ) படிக்காதவர் ஆ) கற்றார்

இ) அருளில்லாதவர் ஈ) அன்பில்லாதவர்

**ஆ) பொருள் தருக.**

5. மெய் =

6. அஞ்சி =

7. நல்கூர்ந்தார் =

8. விதிர்ப்பார் =

**இ) விடை தருக.**

9. கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?
10. பொருளற்ற சொற்களை அவையினர் முன் பேசுபவர் யார் ?
11. பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?
12. முதல் எழுத்து ஒன்றி வரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

**ஈ. அடிமாறாமல் எழுதுக.**

13. ‘அவையஞ்சி’ எனத் தொடங்கும் நீதிநெறிவிளக்கப்பாடலை எழுதக.

## உரைநடைப்பகுதி

## திருக்குறள் கதைகள்

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. பொறை - என்பதன் பொருள் _________.

   அ) முழுமை ஆ) வளமை இ) பொறுமை ஈ) பெருமை

2. போற்றி ஒழுகப்படும் பண்பு _________.

   அ) சினம் ஆ) பொறையுடைமை

   இ) அடக்கமில்லாமை ஈ) அறிவில்லாமை

3. வழியில் _______ ஒன்று இருந்தது. ( குருக்குப்பாதை / குறுக்குப்பாதை )

4. குற்றம் _______ யாரிடம்தான் இல்லை. ( குரை / குறை )

5. திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் ______, ______.

அ)அனிச்சம், குவளை ஆ) தாமரை, அல்லி

இ)மல்லிகை, சாமந்தி ஈ) ஆம்பல், பூவரசு

**ஆ) பொருத்தமான வினாச்சொல்லைத் தேர்ந்தெடுத்து வினாத்தொடரை முழுமையாக்குக.**

( யாது, யாவை, எங்கு, எது, எப்படி , என்ன, யார், யாருடைய )

1. உன்னுடைய ஊரின் பெயர் _______?
2. உனக்குப் பிடித்த வண்ணம் ______?
3. நீ பள்ளிக்கு ______வருகிறாய் ?
4. உன்னுடைய நண்பன் _______?
5. கோடை விடுமுறைக்கு ______சென்றாய் ?

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. திருக்குறள் __________ எழுத்தில் தொடங்கி _________ எழுத்தில் முடிகிறது.
7. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு _________.

**ஈ) பொருள் தருக.**

8. மெய்ப்பொருள் = உண்மைப்பொருள்
9. காவாக்கால் = காக்காவிட்டால்
10. சோகாப்பர் = துன்பப்படுவர்
11. சொல்லிழுக்கு = சொல்குற்றம்

**உ) அடி பிறழாமல் எழுதுக.**

12. ‘யாகாவார்’ மற்றும் ‘நிறையுடைமை’ எனத் தொடங்கும் திருக்குறள்களை எழுதுக.
13. ‘சினம்’ மற்றும் ‘அறிவு’ என முடியும் திருக்குறள்களை எழுதுக.

**ஊ. விடையளி**

14. சினம் எப்போது ஒருவரை அழிக்கும் ?
15. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன ?
16. பொறையுடைமையை ஏன் போற்ற வேண்டும் ?

## மாசில்லாத உலகம் படைப்போம்

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. **மாசு** - என்னும் பொருள் தராத சொல் _________.

   அ) தூய்மை
   ஆ) தூய்மையின்மை
   இ) அழுக்கு
   ஈ) கசடு

2.**மாசு +இல்லாத-** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

   அ) மாசிலாத
   ஆ) மாசில்லாத
   இ) மாசிஇல்லதாத
   ஈ) மாசுஇல்லாத

3. **அவ்வுருவம்** - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

   அ) அவ்+ வுருவம்
   ஆ) அந்த + உருவம்
   இ) அ + உருவம்
   ஈ) அவ்+ உருவம்

4. **நெடிதுயர்ந்து** - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

   அ) நெடிது + உயர்ந்து
   ஆ) நெடி+ துயர்ந்து
   இ) நெடிது + துயர்ந்து
   ஈ) நெடிது+ யர்ந்து

5. **குறையாத-** என்ற சொல்லின் எதிர்ச்சொல் _________.

அ) நிறையாத

ஆ) குறைபாடுடைய

இ) குற்றமுடைய

ஈ) முடிக்கப்படாத

**ஆ. விடையளி**

1. அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர்?
2. சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன ?
3. நாம் பயன்படுத்திய மின் பொருள்களை என்ன செய்ய வேண்டும் ?

**இ. முறை மாறி அமைந்த சொற்றொடர்களை வரிசைப்படுத்தி பத்தி வடிவில் எழுதுக.**

1.சித்தார்த்தர் அன்னப்பறவையை எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். அதன் காலுக்கு மருந்திட்டார்.

2. அப்போது அன்னப்பறவை ஒன்று வானில் மகிழ்ச்சியாகப் பறந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.
3. சித்தார்த்தர் தாமே அன்னப்பறவையை காப்பாற்றியதாகவும் எனவே தமக்கே உரிமை என்றும் கூறினார்.
4. அப்போது அங்கு வந்த தேவதத்தன், அன்னப்பறவையை தாமே அம்பு எய்து வீழ்த்தியதாகவும், அன்னப்பறவையை தன்னிடம் தருமாறும் வேண்டினான்.
5. இளவரசர் சித்தார்த்தர் ஒருநாள் மாலைப்பொழுதில் தமது அரண்மனைப் பூந்தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.
6. திடீரென்று எங்கிருந்தோ விரைந்து வந்த ஓர் அம்பு அன்னப்பறவையின் காலில் பாய்ந்தது. அம்பினால் காயம்பட்ட அன்னப்பறவை சித்தார்த்தரின் காலடியில் விழுந்தது.